**சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலக துணை இயக்குநர் (நிர்வாகம்–2) (பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

**பிறப்பிப்பவர்:– திரு. சொ. முருகன்**

**செ.மு.ஆணை எண். அநிபி.5/133935/ 2018** **நாள். 16.07.2021**

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. E. சாரதி, இளநிலை உதவியாளர் (பி.அ) – இவ்வலுவலகத்தில் 08.06.2020 முற்பகல் முதல் பணியில் சேர்ந்தது – இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி6/133935/2018, நாள். 02.03.2020.
2. திரு. E. சாரதி, இளநிலை உதவியாளரின் பணியேற்பு கடித நாள். 08.06.2020.
3. அரசாணை (3டி) எண். 68, வேளாண்மை (வேநி9)த்துறை, நாள். 07.05.2021.

••••••

**ஆணை:–**

திருப்பூர், வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் திருப்பூர், வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஓட்டுநர் ஆகப் பணிபுரிந்து 22.07.2012 அன்று அமரரான சி. எத்திராஜ் அவர்களது வாரிசுதாரர் / மகன் திரு. E. சாரதி அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500–62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆகப் பணிநியமனம் செய்து பார்வை (1)–இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து பார்வை (2) இன்படி திரு. E. சாரதி அவர்கள் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக 08.06.2020 முற்பகல் முதல் தற்காலிகமாக பணியில் சேர்ந்து கொண்டார்.

3) எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு **இவ்வலுவலகத்தில், இளநிலை உதவியாளர் (பி.அ)** ஆக **08.06.2020 முற்பகல்** பணியில் சேர்ந்து, பணிபுரிந்து வரும் திரு. E. சாரதி அவர்களின் பணியினை இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பார்வை (3)–இல் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 08.06.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(தொடர்ச்சி...)

4) மேற்படி, தனியரின் பணியினை வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–செ௱. முருகன்,
துணை இயக்குநர் (நிர்வாகம்–2) (பொ).

பெறுநர்

திரு. E. சாரதி,
இளநிலை உதவியாளர் (பி.அ),
'அநிபி' பிரிவு, இவ்வலுவலகம்.

**நகல்:** 'அபபி' மற்றும் 'பணம்' பிரிவுகள், இவ்வலுவலகம்.
**நகல்:** அநிபி–5 பொருள்கோப்பு.

//உத்திரவின்படி//

27/7/2021
கண்காணிப்பாளர்.

27/07/2021

## சுருக்கம்

பணியமைப்பு – வேளாண்மைத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு E. சாரதி என்பவரின் பணியினை 08.06.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மை (வேதி9) துறை

அரசாணை (3டி) எண் 68

நாள்: 07.05.2021
பிலவ வருடம்,
சித்திரை திங்கள் 24,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி5 / 133935 / 2018, நாள் 25.01.2021.

*****

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருப்பூர், வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில், திருப்பூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஈப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்தபோது 22.07.2012 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த (லேட்) சி. எத்திராஜ் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகன் திரு திரு E. சாரதி அவர்களின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களைப் பரிசீலித்து வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 133935 / 2018, நாள் 02.03.2020–இன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிஅ) வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் 08.06.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, அன்னாரின் பணியினை 08.06.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிஅ) பணி நியமனம் செய்யப்பட்ட திரு E. சாரதி என்பவரின் பணியினை 08.06.2020 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலும், இளநிலை உதவியாளராகப் (பிஅ) பணி நியமனம் செய்யப்பட்ட திரு E. சாரதி அவர்களின் பணி 08.06.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், தனியர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ. சா. எண் 6261/ க்யூ.1 / 2021, நாள் 23.04.2021 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் அ. சா. எண் 13732 / ஜி1 / 2021–1, நாள் 06.05.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5(இ).
திரு E. சாரதி, இளநிலை உதவியாளர் (பிஅ),
வழி: வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை–1), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்துறை, சென்னை–9.
தொடர்புடைய கோப்பு எண் 2982 / வேநி9 / 2021
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //**

வ. சசிகுமார் 10/5/2021
பிரிவு அலுவலர்

10/5/2021